**நிதிய முகாமையாளரின் மீளாய்வு**

பாரிய பொருளாதார நிலைமை

தசாப்தங்களில் நிகழ்ந்த அதன் மோசமான நிதியியல் நெருக்கடியிலிருந்து நாடு இன்னமும் மீண்டு வருவதுடன் இலங்கையின் பொருளாதாராமானது 2023 இன் 1ஆம் காலாண்டில் வருடத்திலிருந்து வருடம் 11.5%[1]ஆல் சுருக்கமடைந்தது. 2023 இன் 1ஆம் காலாண்டில் கைத்தொழில் துறை மற்றும் சேவைகள் துறையின் செயற்திறனானது முறையே 23.4%[2] மற்றும் 5%[3] ஆல் வீழ்ச்சியடைந்தவேளை வேளாண்மைத் துறையானது 0.8%[4] ஆல் விரிவடைந்தது. 2023 இன் 2ஆம் பாதியில் சந்தை வட்டி வீதங்களில் எதிர்பார்க்கப்படும் நிலைபேறான வீழ்ச்சிக்கு மத்தியில் சுற்றுலாத் துறையிலான விரைவான மீட்பு, தனியார் துறை கடன் வளர்ச்சி மற்றும் நுகர்விலான ஏற்றங்களுடன் மெய்யான மொத்த உள்ளூர் உற்பத்தியானது விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ச.நா.நி. இன் நீடிக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் முடிவுறுத்தலுக்கு வசதியளிப்பதற்காக மார்ச் 2023 இல் இலங்கை மத்திய வங்கியானது (இ.ம.வ.) அதன் கொள்கை வட்டி வீதத்தினை 100[5] அடிப்படை புள்ளிகளினால் அதிகரித்தது. எவ்வாறாயினும், பணவீக்கமானது சிறப்பாக கட்டுப்படுத்தப்பட்டதனால் இ.ம.வ. அதன் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை தளர்த்தியுள்ளதுடன் 2023 பூராவும் மத்திய வங்கியானது அதன் தளர்த்தல் நிலைப்பாட்டினை தொடரும் என நாம் நம்புகின்றோம். தளர்த்தல் நிலைப்பாடானது சந்தை வட்டி வீதங்களை குறைத்து தனியார் துறை கடன் வளர்ச்சியினை வலுப்படுத்தும் என நாம் நம்புகின்றோம்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது வெளிவாரித் துறையானது மேம்பட்ட செயற்திறனை நிரூபிப்பதற்கு ஆரம்பித்தது. இறக்குமதியிலான கணிசமான வீழ்ச்சியின் காரணமாக வர்த்தகப் பற்றாக்குறையானது 2023 இன் 1ஆம் பாதியில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. வருடத்தின் முதலாம் பாதியில் சுற்றுலாத்துறையிலான வருமானமும் தொழிலாளர் பணமனுப்பல்களும் கணிசமாக மேம்பட்டதுடன் எதிர்வரும் மாதங்களில் மேலும் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஜூன் 2023 இல் அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலான வெளிநாட்டு முதலீடுகள் ஒரு குறிப்பிடத்தக்க தேறிய உட்பாய்ச்சலினை பதிவுசெய்தன. ஜூன் 2023 இன் இறுதியில் சீனாவின் பீபள்ஸ் வங்கியிலிருந்தான பரிமாற்றல் வர்த்தக வசதி உள்ளடங்கலாக மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்க மட்டமானது USD 3.7 பில்லியனாக உயர்வடைந்தது. மேம்பட்ட அந்நிய செலாவணி உட்பாய்ச்சல்கள் மற்றும் மேம்பட்ட சந்தை உணர்வுகளுடன் 2023 இன் 2ஆம் காலாண்டில்[6] அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயானது மதிப்புயர்வடைந்தது.

**வட்டி வீதக் கண்ணோட்டம்**

பணவீக்க அழுத்தங்களை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் விளைவாக, 2023 இன் 2ஆம் பாதியில் பணவீக்கமானது நடு ஒற்றை எண் மட்டத்திற்கு குறைவடைந்தது என நாம் நம்புகின்றோம். பணவீக்கத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு ஏற்ப இ.ம.வ. வளர்ச்சியினை தூண்டுவதற்காக ஒரு தாராளமயமான நாணயக் கொள்கையினை கடைப்பிடிக்கும் என எதிர்பார்ப்பதுடன் சந்தை வட்டி வீதங்கள் கூர்மையான வீழ்ச்சியினை[7] சந்திக்கும் என நாம் நம்புகின்றோம்.

[1] மத்திய வங்கி – வரைபடத் தொகுப்பு
[2] மத்திய வங்கி – வரைபடத் தொகுப்பு
[3] மத்திய வங்கி – வரைபடத் தொகுப்பு
[4] மத்திய வங்கி – வரைபடத் தொகுப்பு
[5] நாணயக் கொள்கை மீளாய்வு – மார்ச் 2023
[6] வெளிவாரித் துறைச் செயற்திறன் - ஜூன் 2023
[7] நாணயக் கொள்கை மீளாய்வு – ஜூன் 2023

## CTCLSA பணச் சந்தை நிதியம் (ஆரம்பம்: 27 பெப்ரவரி 2012)

**நிதிய முகாமையாளர்**

குகன் விநாயகசுந்தரம்

**நிதியத்தின் குறிக்கோள் மற்றும் அளவை மட்டக்குறி**

இந்த நிதியமானது ஒரு திறந்த யுனிட் ட்ரஸ்ட் நிதியமாகும் என்பதுடன் இது 365 நாட்களுக்குள் முதிர்வடையும் முதலீட்டுத் தரத்திலான பிணையங்களில் முதலீடு செய்கின்றது. நிதியத்தின் முதலீட்டுக் குறிக்கோள் குறைவான மட்டத்திலான இடருடைய பிணையங்களைக் கொண்ட ஒரு முதலீட்டுத் தேக்கத்தில் முதலீடு செய்வதன் மூலம் ஒரு வருடாந்த வருமானத்தினை வழங்குவதாகும்.

**விளக்கவுரை**

30 ஜூன் 2023 இல் நிறைவடைந்த 6 மாதங்களின்போது CTCLSA பணச் சந்தை நிதியமானது அதன் முதலீட்டாளர்களுக்கு ஒரு வருடாந்த விளைவாக 19.52%[8] இனை வழங்கியது. நிதியமானது பிரதானமாக முதலீட்டுத் தரம் மற்றும் அதற்கு மேலான தரத்தினையுடைய வழங்குநர்களுடன் நிலையான வைப்புகள் மற்றும் ஏனைய பணச் சந்தை கருவிகளில் முன்னிறுத்தம் செய்கின்றது.

**வெளிக்காட்டல் 01: நிதியத்தின் விளைவு எதிர் அளவை மட்டக்குறி விளைவு[9]**

| காலம் | GAMMF | NDBIB-CRISIL 91 நாள் தி.உண்டியல் சுட்டி | GAMMF-வருடாந்தம்* |
|---|---|---|---|
| 1ஆம் பாதி 2023 | 9.68% | 15.46% | 19.52% |
| ஆரம்பத்திலிருந்து | 204.82% | 189.52% | 10.32% |

**செயற்திறன்கள் 28 ஜூன் 2023 இல் உள்ளவாறான மாத இறுதி விலைகளின் அடிப்படையிலாகும். இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்திறனானது கடந்தகால செயற்திறனை குறிப்பிடுவதுடன் இது எதிர்கால விளைவுக்கான உத்தரவாதமல்ல.*


பொருளாதாரத்தை தூண்டுவதற்காக மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட பொருத்தமான நடவடிக்கைகளினால் எதிர்வரும் காலத்தில் சந்தை வட்டி வீதங்கள் மேலும் வீழ்ச்சியடையும் என நாம் நம்புவதுடன் மத்திய காலத்தில் பணவீக்கமானது நடு ஒற்றை எண் மட்டங்களில் நிலைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வழங்கல் நிலைமைகளிலான மேம்பாடுகள் மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகளிலான படிப்படியான தளர்த்தலுடன் வணிக மற்றும் முதலீட்டாளர் உணர்வுகளில் ஒரு மேம்பாடு காணப்படும் என்பதுடன் இது பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிக்கும். இந்த மீட்டலானது மத்திய காலத்தின் மீது நிலைபேறுடையதாயிருக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

எமது பாரியபொருளாதார நோக்கின் காரணமாக நாம் நீண்ட காலக் கருவிகளில் முதலீடு செய்துள்ளவேளை குறுகியகால முதிர்வையுடைய கருவிகளில் முதலீடு செய்வதன் மூலம் ஒரு உயர்ந்த மட்டத்திலான திரவத்தன்மையினை பராமரிக்க இயலுமையாயிருந்தது.


[8] பணச் சந்தை செய்கைத் தாள்
[9] பணச் சந்தை செய்கைத் தாள்

**நிதியத்தின் முக்கிய செய்கைகள்**[10]

நிதியத்தின் கடன் தரம் - தே.சொ.பெ. இன் % ஆக





சொத்து ஒதுக்கீடு





30 ஜூன் 2023 இல் உள்ளவாறு நிதியத்தின் மொத்த தேறிய சொத்தின் பெறுமதியானது ரூபா 551.36[11] மில்லியன் என்பதுடன் நிதியத்தில் 402[12] அலகுடைமையாளர்கள் உள்ளார்கள். நிதியத்தின் அலகொன்றின் விற்பனை விலை மற்றும் கொள்வனவு விலையான 30 ஜூன் 2023 இல் ரூபா 26.4690[13] ஆகும்.

முதிர்வுத் தோற்றுருவம் - தே.சொ.பெ. இன் % ஆக




[10] பணச் சந்தை - செய்கைத் தாள்
[11] பணச் சந்தை - செய்கைத் தாள்
[12] செயற்பாட்டு கூற்று – 28.06.2023
[13] பணச் சந்தை - செய்கைத் தாள்

**கொழும்பு பங்குச் சந்தையின் (கொ.ப.ப.) செயற்திறன் - 2023 இன் முதலாம் பாதி**[14]




2023 இன் முதல் ஆறு மாதங்களின்போது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் அனைத்து பங்கு விலைச் சுட்டி (அ.ப.வி.சு.) 11.23%[15] ஆல் அதிகரித்தவேளை S&P SL 20 விலைச் சுட்டியானது 2.96%[16] ஆல் அதிகரித்தது. உள்ளூர் கடன் உகப்பாக்கத்திலான (உ.க.உ.) சிறந்த தெளிவு, இதுவரைக்கும் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தினால் துணையளிக்கப்பட்ட தாராளமயமாக்கல் நாணயக் கொள்கை நிலைப்பாடு என்பன நெடுந்துாரத்திற்கான வளர்ச்சியினை சாத்தியமாக்கியதனால் கொ.ப.ப. அதன் சாத்தியமான உத்வேகத்தினை தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், சிறந்த செயற்பாட்டு சூழலினால் துணையளிக்கப்பட்டு கூட்டாண்மை உழைப்புகள் 2023 இன் 2ஆம் பாதியில் மீட்சியடையும் என நாம் நம்புவதுடன் இது உரித்துவ பெறுமதியிடல்களை மீள் தரப்படுத்தும். மேலும், வட்டி வீதங்களிலான கீழ்நோக்கிய நகர்வின் காரணமாக உயர்ந்த விளைவினை உருவாக்குவதற்காக உரித்துவங்கள் நோக்கிய நகர்வுகள் இடம்பெறும் என நாம் நம்புகின்றோம். உரித்துவமானது ஒரு வினைத்திறனான வரியுடனான சொத்து வகுப்பு என்பதனால் உள்ளூர் முதலீட்டாளர்களுக்கு இது ஒரு மேலதிக நன்மையாகும்.

[14] உரித்துவ வேலைப்பாடு

[15] உரித்துவ வேலைப்பாடு

[16] உரித்துவ வேலைப்பாடு

**CTCLSA வளர்ச்சி உரித்துவ நிதியம் (ஆரம்பம் 27 பெப்ரவரி 2012)**

**நிதிய முகாமையாளர்**


குகன் விநாயகசுந்தரம்

**நிதியத்தின் குறிக்கோள் மற்றும் அளவை மட்டக்குறி**

இந்நிதியமானது ஒரு திறந்த வளர்ச்சி நிதியம் என்பதுடன் இது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள உரித்துவப் பிணையங்களைக் கொண்ட ஒரு பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டுத் தேக்கத்தில் முதலீடு செய்கின்றது. இதன் குறிக்கோள் மத்திய நீண்ட காலத்தில் மூலதன மதிப்புயர்வினை அடைவதாகும்.

**விளக்கவுரை**

**நிதியத்தின் விளைவு எதிர் அளவை மட்டக்குறியின் விளைவு**



**வெளிக்காட்டல் 02: நிதியத்தின் விளைவு எதிர் அளவை மட்டக்குறியின் விளைவு**[17]

| காலம்* | நிதியம் | அளவை மட்டக்குறி அ.ப.வி.சு. | S&P SL 20 | அ.ப.மொ.வி.சு. |
|---|---|---|---|---|
| ஆண்டுமுதல் இன்றுவரை – ஜூன் 2023 | **15.76%** | 11.23% | 2.96% | 11.76% |
| ஆரம்பத்திலிருந்து திரட்டு | **112.94%** | 72.42% | -8.19% | 91.67% |
| ஆரம்பத்திலிருந்து கூட்டு வருடாந்த வளர்ச்சி வீதம் | **6.89%** | 4.92% | -0.75% | 5.91% |

*குறிப்பு: அனைத்து பங்கு விலைச் சுட்டி (அ.ப.வி.சு.), அனைத்து பங்கு மொத்த விளைவுச் சுட்டி (அ.ப.மொ.வி.சு.) மற்றும் S&P ஸ்ரீலங்கா 20 சுட்டி (S&P SL20) என்பன 28 ஜூன் 2023 இல் உள்ளவாறான கொ.ப.ப. இன் தரவுகளின் அடிப்படையிலாகும்.*

** செயற்திறன்கள் 28 ஜூன் 2023 இல் உள்ள மாத இறுதி விலைகளின் அடிப்படையிலாகும். இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்திறன் தரவுகள் கடந்தகால செயற்திறனை குறிப்பிடுவதுடன் இது எதிர்கால விளைவிற்கான உத்தரவாதமல்ல.*

30 ஜூன் 2023 இல் நிறைவடைந்த காலத்தின்போது நிதியத்தின் வளர்ச்சி 15.76% ஆக காணப்பட்டவேளை அ.ப.வி.சு. மற்றும் S&P SL20 என்பன முறையே 11.23% மற்றும் 2.96% ஆல் வளர்ச்சியடைந்தன. ஆரம்பத்திலிருந்து நிதியமானது 112.94% விளைவினை வழங்கியுள்ளதுடன் இது அதேகாலப்பகுதியில் காணப்பட்ட அனைத்து பங்கு விலைச் சுட்டியின் செயற்திறனைவிட 72.42% அதிகமாகும்.


**வெளிக்காட்டல் 08: 30 ஜூன் 2023 இல் உள்ளவாறான நிதியத்தின் முதல் 5 உரித்துடைமைகள்**[18]

| தே.சொ.பெ. இன் அடிப்படையில் முதல் 5 உரித்துடைமைகள் | | |
|---|---|---|
| **பங்கு** | **டிக்கர்** | **தே.சொ.பெ. இன் %** |
| சன்சைன் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. | SUN.N0000 | **8%** |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. | JKH.N0000 | **7%** |
| ஹேலீஸ் பி.எல்.சி. | HAYL.N0000 | **7%** |
| ஏசிஎல் கேபள்ஸ் பி.எல்.சி. | ACL.N0000 | **7%** |
| நெஸ்ட்லே லங்கா பி.எல்.சி. | NEST.N0000 | **7%** |

[17] செய்கைத் தாள் - உரித்துவ நிதியம்
[18] செய்கைத் தாள் - உரித்துவ நிதியம்

வெளிக்காட்டல் 09: 30 ஜுன் 2023 உள்ளவாறான நிதியத்தின் துறைசார்பான ஒதுக்கீடு[19]

**துறைசார் ஒதுக்கீடு (காசும் காசுக்குச் சமனானவற்றுடன்)**




2023 இன் 1ஆம் காலாண்டின்போது பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சுருக்கமடையும் வணிக பருமனளவுகள், உயர்ந்த நிதியளித்தல் கிரயங்கள் மற்றும் உயர்வடையும் வட்டி வீதங்களுக்கு மத்தியில் உரித்துவங்களுக்கான மந்தமான உணர்வுகள் என்பவற்றின் காரணமாக கூட்டாண்மை உழைப்புகள் வீழ்ச்சியடைந்தன. இந்தச் செயற்பாட்டு சூழலில் நிதியமானது நீண்டகாலத்தில் பயனடைவதற்காக அடிப்படையில் திடமான திரவத்தன்மையுள்ள பங்குகளில் முதலீடு செய்தது. வீழ்ச்சியடையும் வட்டி வீதங்களிலிருந்து நலனடையும் கம்பனிகளில் எமது முன்னிறுத்தம் பராமரிக்கப்பட்டவேளை உள்ளூர் நுகர்விலான மீட்சியுடன் பயனளிக்கக்கூடிய நுகர்வோர் வணிகத்திலுள்ள பங்குகளையும் நாம் சாதகமாக நோக்குகின்றோம்.

நாணயக் கொள்கையில் மேலதிக சுருக்கம் காணப்படும் என்ற எதிர்பார்ப்புடன் எதிர்வரும் காலங்களில் வட்டி வீதங்கள் மேலும் குறைவடையும் என்று நாம் எதிர்பார்ப்பதுடன் இது உயர்ந்த கூட்டாண்மை உழைப்புகளுக்கு துணைபுரியும். எனவே, மீளாய்வு செய்யப்படும் காலத்தின் இறுதிப்பாகத்தில் நாம் மூலதனப் பொருட்கள், வங்கியியல், பன்முக நிதியியல் சேவைத் துறை மற்றும் சுற்றுலாத் துறைகளுக்கான வெளிப்பாட்டினை அதிகரித்தோம். முன்மொழியப்பட்ட உள்ளூர் கடன் உகப்பாக்கலின் பின்னர் வங்கியியல் துறையில் அதன் ஆகக்குறைந்த தாக்கத்தின் காரணமாக இத்துறையானது மீள் தரப்படுத்தப்படும் என நாம் எதிர்பார்க்கின்றோம். உரித்துவத்திலான எமது நேர்மறையான பார்வையின் காரணமாக நாம் இச்சொத்து வகுப்பில் 80% ஒதுக்கீட்டினை வைத்திருப்பதற்கு தெரிவுசெய்துள்ளோம்.

30 ஜுன் 2023 இல் நிதியத்தின் மொத்த தேறிய சொத்தின் பெறுமதியானது ரூபா 78.16[20] மில்லியனாகக் காணப்பட்டவேளை நிதியத்தில் 235[21] அலகுடைமையாளர்கள் இருந்தார்கள். 30 ஜுன் 2023 இல் உள்ளவாறான நிதியத்தின் அலகொன்றின் மீட்டல் விலை ரூபா 21.2966[22] ஆகும்.

[19] செய்கைத் தாள் - உரித்துவ நிதியம்
[20] செய்கைத் தாள் - உரித்துவ நிதியம்
[21] செயற்பாட்டு கூற்று – 28.06.2023
[22] செய்கைத் தாள் - உரித்துவ நிதியம்

**CTCLSA வருமான நிதியம் (ஆரம்பம் : 26 ஜூலை 2021)**

**நிதிய முகாமையாளர்**

குகன் விநாயகசுந்தரம்

**நிதியத்தின் குறிக்கோள் மற்றும் அளவை மட்டக்குறி**

CTCLSA வருமான நிதியத்தின் முதலீட்டுக் குறிக்கோளாக மிதமான மட்டத்திலான இடருடன் கூடிய நிலையான வருமானப் பிணையங்களைக் கொண்ட ஒரு முதலீட்டுத் தேக்கத்தில் முதலீடு செய்வதன் மூலம் ஒரு வருடாந்த வருமானத்தினை வழங்குதல் காணப்படுகின்றது. நிதியத்தின் விளைவு மற்றும் இடர் தேவைப்பாடுகளை கருத்திற்கொண்டு அலகுடைமையாளர்களுக்கு ஒரு பொருத்தமான விளைவினை வழங்குவதற்காக நிதியமானது கூட்டாண்மை கடன் மற்றும் அரசாங்கப் பிணையங்களில் முதலீடு செய்யும்.

**விளக்கவுரை**

30 ஜூன் 2023 இல் நிறைவடைந்த 6 மாத காலத்தின்போது CTCLSA வருமான நிதியமானது முதலீட்டாளர்களுக்கு ஒரு வருடாந்த விளைவாக 23.69% இனை வழங்கியுள்ளது. நிதியமானது பிரதானமாக அரசாங்கப் பிணையங்கள் மற்றும் முதலீட்டுத் தரம் மற்றும் அதற்கு மேலான தரத்தினையுடைய வழங்குநர்களுடன் ஏனைய நிலையான வருமானக் கருவிகளில் முன்னிறுத்தம் செய்கின்றது.

**வெளிக்காட்டல் 03: நிதியத்தின் விளைவு எதிர் அளவை மட்டக்குறியின் விளைவு**[23]


| காலம் | GAIF | NDBIB-CRISIL 364 நாள் தி. உண்டியல் சுட்டி | GAIF-வருடாந்தம் |
|---|---|---|---|
| 2023 ஜூன் | 1.97% | 5.92% | 24.00% |
| ஆண்டுமுதல் இன்றுவரை 2023 | 11.75% | 21.13% | 23.69% |

** செயற்திறன்கள் 30 ஜூன் 2023 இல் உள்ள மாத இறுதி விலைகளின் அடிப்படையிலாகும். இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்திறன் தரவுகள் கடந்தகால செயற்திறனை குறிப்பிடுவதுடன் இது எதிர்கால விளைவிற்கான உத்தரவாதமல்ல.*


[23] செய்கைத் தாள் - வருமான நிதியம்

**நிதியத்தின் முக்கிய செய்கைகள்**[24]

நிதியத்தின் கடன் தரம் - தே.சொ.பெ. இன் % ஆக





சொத்து ஒதுக்கம்




30 ஜூன் 2023 இல் உள்ளவாறான நிதியத்தின் மொத்த தேறிய சொத்தின் பெறுமதியானது ரூபா 98.45[25] மில்லியன் என்பதுடன் நிதியத்தில் 55[26] அலகுடைமையாளர்கள் இருக்கின்றார்கள். 30 ஜூன் 2023 இல் உள்ளவாறான நிதியத்தின் அலகொன்றின் விற்பனை விலை மற்றும் கொள்வனவு விலை ரூபா 12.8174[27] ஆகும்.

முதிர்வுத் தோற்றுருவம் - தே.சொ.பெ. இன் % ஆக




[24] செய்கைத் தாள் - வருமான நிதியம்
[25] செய்கைத் தாள் - வருமான நிதியம்
[26] செயற்பாட்டு கூற்று - 28.06.2023
[27] செய்கைத் தாள் - வருமான நிதியம்

பொருளாதாரத்தினை தூண்டிவிடுவதற்காக மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட பொருத்தமான நடவடிக்கைகளினால் எதிர்வரும் காலத்தில் சந்தை வட்டி வீதங்கள் மேலும் வீழ்ச்சியடையும் என நாம் நம்புவதுடன் மத்திய காலத்தில் பணவீக்கமானது நடு ஒற்றை எண் மட்டங்களில் நிலைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வழங்கல் நிலைமைகளிலான மேம்பாடுகள் மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகளிலான படிப்படியான தளர்த்தலுடன் வணிக மற்றும் முதலீட்டாளர் உணர்வுகளில் ஒரு மேம்பாடு காணப்படும் என்பதுடன் இது பொருளாார வளர்ச்சியினை ஊக்குவிக்கும். இந்த மீட்டலானது மத்திய காலத்தின் மீது நிலைபேறுடையதாயிருக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

எமது பாரியபொருளாதார நோக்கின் காரணமாக நிதியத்தின் விளைவினை மேம்படுத்துவதற்காக நாம் நீண்ட காலக் கருவிகளில் முதலீடு செய்துள்ளவேளை வட்டி வீதங்கள் குறைவடையும்போது மூலதன இலாபத்தினை அடையப் பெறுவதற்காக நடைமுறையிலுள்ள அரசாங்கப் பிணையங்களை நாம் வைத்திருக்கின்றோம்.

## DATA LABELS

Graph on Page 5
Fixed Deposits – நிலையான வைப்புகள்
Savings – சேமிப்பு

1 – 3 Months – 1 – மாதங்கள்
3 – 6 Months- 3 – 6 மாதங்கள்
6 – 12 Months – 6 – 12 மாதங்கள்
12 – 15 Months – 12 – 15 மாதங்கள்

Graph on Page 6
Turnover – புரள்வு
ASPI – அ.ப.வி.ச.

Graph on Page 7
Indexed – சுட்டியிடப்பட்டது
ASPI – அ.ப.வி.ச.
CTCLSA Growth Equity Fund – CTCLSA வளர்ச்சி உரித்துவ நிதியம்

Graph on Page 9
Capital Goods - மூலதனப் பொருட்கள்
Cash & Cash Equivalents – காசும் காசுக்குச் சமனானவைகளும்
Food Berverage & Tobacco – உணவு, பானம் மற்றும் புகையிலை
Consumer Services – நுகர்வோர் சேவைகள்
Materials – பொருட்கள்
Diversified Financials – பன்முகப்படுத்தப்பட்ட நிதிகள்
Insurance – காப்புறுதி
Banks – வங்கிகள்
Retailing – சில்லறை வணிகம்
Food & Staples Retailing – உணவு மற்றும் பிரதான பொருட்களின் சில்லறை வணிகம்
Utilities – பயன்பாடுகள்
Investment Banking & Brokerage – முதலீட்டு வங்கியியல் மற்றும் தரகு வணிகம்

Graph on Page 11
Gov. Security Risk Free – அரசாங்கம் பிணையம் இடர் அற்றது

Fixed Deposits – நிலையான வைப்புகள்
Government Securities – அரசாங்கப் பிணையங்கள்
Savings – சேமிப்பு

1 – 3 Months – 1 – மாதங்கள்
3 – 6 Months- 3 – 6 மாதங்கள்
6 – 12 Months – 6 – 12 மாதங்கள்
Above 18 Months – 18 மாதங்களுக்கு மேல்